KANTON AARGAU

**DEPARTEMENT**
**BILDUNG, KULTUR UND SPORT**
Abteilung Volksschule

2026

**குறிப்பிதழ்**

# துறைசார் பாடசாலை (Mittelschulen) மற்றும் தொழில்துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமை (Berufsfachschulen mit Berufsmaturität) க்கு 2026/27 வருடத்தில் அனுமதி பெறுவதற்குரிய தகவல்கள்

---

## 1. பெசீர்க் (Bezirks-) - செக்குன்டார் பாடசாலையில் (Sekundarschule) படித்த பிள்ளைகளுக்கு அனுபவ தரத்தின் அடிப்படையில் அனுமதி கிடைக்கும்.

பெசீர்க் - செக்குன்டார் பாடசாலையில் படித்த பிள்ளைகளின் இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்த தேர்ச்சி அறிக்கையின் புள்ளிகளின் அடிப்படையில் பொருளாதாரத்துறைசார் பாடசாலை (Wirtschaftsmittelschule WMS), கணினித்துறைசார்பாடசாலை (Informatikmittelschule IMS), துறைசார் பாடசாலை (Fachmittelschule FMS) மற்றும் (தொழில்துறைசார் பாடசாலையுடன் கூடியதொழில் புலமை) (Berufsfachschulen mit Berufsmaturität BMS) க்கும் போகலாம்.

பெசீர்க் பாடசாலையில் படித்த பிள்ளைகளுக்குரிய மேலதிக சலுகையாக அவர்களின் இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்த தேர்ச்சி அறிக்கையின் புள்ளிகளின்படி யிம்நாசியத்திற்குப் (Gymnasium) போகலாம்.

அனுமதி பெறுவதற்கு பெசீர்க் பாடசாலையில் படித்த பிள்ளைகளுக்கும் செக்குன்டார் பாடசாலையில் படித்த பிள்ளைகளுக்கும் ஒரே பாடங்களே கவனத்தில் எடுக்கப்படும்.

நடுநிலைப் பாடசாலைகளில் (Gymnasium, WMS, IMS, FMS) பொதுவாக மாணவ- மாணவியர் உள் நுழையும் போது 18 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப் படுவார்கள்.

## 2. தற்காலிக மற்றும் முடிவான அனுமதி

பிள்ளைகள் பெசீர்க் அல்லது செக்குன்டார் பாடசாலையின் 3வது ஆண்டு இறுதிக்கு முதல் தவணையில் (இடைக்கால அறிக்கையில்) கோரப்படும் தகைமைகளை (3. மற்றும் 4ம் தரவுகளைப் பார்க்க) அடைந்த பட்சத்தில் தற்காலிகமாக யிம்நாசியம் பொருளாதாரத் துறைசார் பாடசாலை கணினித்துறைசார்பாடசாலை மற்றும் துறைசார் பாடசாலைக்கு அனுமதிக்கப்படுவார்கள். அதன் அர்த்தம் என்னவெனில் அடுத்து வரும் நடுநிலைப் பாடசாலையில் முதலாவது தவணைக்குள் சித்தி பெற்று அந்த தற்காலிகமாகக் கற்கும் கால எல்லையை அகற்ற வேண்டும்.

பிள்ளைகள் பெசீர்க் அல்லது செக்குன்டார் பாடசாலையின் 3வது ஆண்டு இரண்டாம் தவணையில் (வருடாந்தத் தேர்ச்சி அறிக்கை) கோரப்படும் தகைமைகளை அடைந்த பட்சத்தில முடிவாக யிம்நாசியம், பொருளாதாரத்துறைசார் பாடசாலை, கணினித்துறைசார்பாடசாலை மற்றும் துறைசார் பாடசாலைக்கு அனுமதி பெறுவார்கள்.

தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற கோரப்படும் தகைமைகளை கடைசி வருட முதல் தவணையில் அடைந்தால் தற்காலிகமாகவும் கடைசி வருட இரண்டாம் தவணையில் அடைந்தால் முடிவாகவும் ஏற்றுக் கொள்ளப்படுவார்.

**3. பெசீர்க் பாடசாலை மாணவர்களிடம் யிம்நாசியம் பொருளாதாரத் துறைசார் பாடசாலை, கணினியில் பாட-சாலைஇ துறைசார் பாடசாலை மற்றும் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற கோரப்படும் தகைமைகள்**

பெசீர்க் பாடசாலை மாணவர்கள் பரீட்சையின்றி யிம்நாசியத்திற்கு அனுமதி பெற வேண்டுமாயின் பாடசாலைக் 3வது வருடத்தில் கீழுள்ள தகைமைகளை அடைந்திருக்கவேண்டும்:

- இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையில் கணிதபாடத்திற்கும் டொச் மொழிக்கும் குறைந்தது 4,0 புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும்.
- இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையின் அட்டவணை 1ல் உள்ள கணக்கீட்டின் படி (5ஐப் பார்க்க) சராசரிப்புள்ளிகளாகக் குறைந்தது 4,7 எடுத்திருக்க வேண்டும்.

பெசீர்க் பாடசாலை மாணவர்கள் பரீட்சையின்றி பொருளாதாரத் துறைசார் பாடசாலை, கணினித்துறைசார் பாட-சாலை, துறைசார் பாடசாலை மற்றும் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற வேண்டுமாயின் பாடசாலைக் 3வது வருடத்தில் கீழுள்ள தகைமைகளை
அடைந்திருக்கவேண்டும்:

- இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையில் கணிதபாடத்திற்கும் டொச் மொழிக்கும் குறைந்தது 4,0 புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும .
- இடைக்கால அறிக்கை மற்றும் வருடாந்தத்தேர்ச்சி அறிக்கையின் அட்டவணை 1ல் உள்ள கணக்கீட்டின் படி (5ஐப் பார்க்க) சராசரிப்புள்ளிகளாகக் குறைந்தது 4,4 எடுத்திருக்க வேண்டும்.

**4. செக்குன்டார் பாடசாலை மாணவர்களிடம் பொருளாதாரத் துறைசார் பாடசாலை, கணினித்துறைசார் பாட-சாலை, துறைசார் பாடசாலை மற்றும் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற கோரப்படும் தகைமைகள்**

செக்குன்டார் பாடசாலை மாணவர்கள் பரீட்சையின்றி பொருளாதாரத் துறைசார் பாடசாலை,
கணினித்துறைசார்பாடசாலை, துறைசார் பாடசாலை மற்றும் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு அனுமதி பெற வேண்டுமாயின் பாடசாலைக் 3ஆம் வருடத்தில் கீழுள்ள தகைமைகளை
அடைந்திருக்க வேண்டும்:

- இடைக்கால அறிக்கையிலும் வருடாந்த அறிக்கையிலும் கணிதபாடத்திலும் டொச் மொழியிலும் குறைந்தது 4.0 புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும்.
- இடைக்கால அறிக்கையிலும் வருடாந்த அறிக்கையிலும் அட்டவணை 1ல் உள்ள கணக்கீட்டின் படி (5ஐப் பார்க்க) குறைந்த சராசரிப்புள்ளிகளாக 5.3 ஆவது எடுத்திருக்க வேண்டும்.

**5. சராசரிப்பள்ளிகள் கணக்கீடு**

சராசரிப்பள்ளிகள் பின்வருமாறு கணக்கிடப்படும்.

அட்டவணை 1: சராசரிப்பள்ளிகள் கணக்கீடு

| **துறை** | **புள்ளிகள் எண்ணிக்கை** | **குறிப்பு** |
|---|---|---|
| டொச் மொழி | இருமடங்காக்கப்படும் | குறைந்தது 4.0 புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும். |
| ஆங்கிலம் | சாதாரணமாக | - |
| பிரெஞ்ச் | சாதாரணமாக | - |
| கணிதம் | இருமடங்காக்கப்படும் | குறைந்தது 4.0 புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும். |

| துறை | புள்ளிகள் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|
| இயற்கை மற்றும் தொழில்நுட்பம் | இருமடங்காக்கப்படும் | - |
| இடங்கள், நேரங்கள், சமூகங்கள் | இருமடங்காக்கப்படும் | - |
| அரசியல் கல்வி | சாதாரணமாக | „அரசியல் கல்வி“, „பொருளாதாரம், வேலை, வீடு“ மற்றும் „ஊடகம் மற்றும் கணினித்துறை“ இந்த மூன்று பாடங்களின் புள்ளிகளின் சராசரி கணக்கெடுக்கப்பட்டு ஒரு தசம இடத்தற்கு முழுமைப்படுத்தப்படும். இந்தப்பள்ளியே சராசரிபுள்ளிகள் மதிப்பீட்டிற்கு சாதாரணமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். |
| பொருளாதாரம். வேலை, வீடு | | |
| ஊடகம் மற்றும் கணினித்துறை | | |
| சங்கீதம் | சாதாரணமாக | „சங்கீதம்“, „விளையாட்டும் உடலசைவும்“ மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடம் „படம் வரைதல்“ அல்லது „ஜவுளி மற்றும் தொழில்நுட்ப வடிவமைப்பு“ இந்த மூன்று பாடங்களின் புள்ளிகளின் சராசரி கணக்கெடுக்கப்பட்டு ஒரு தசம இடத்தற்கு முழுமைப்படுத்தப்படும். இந்தப்பள்ளியே சராசரிபுள்ளிகள் மதிப்பீட்டிற்கு சாதாரணமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். |
| விளையாட்டும் உடலசைவும் | | |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பாடம் | | „திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி“ என்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பாடத்தில் மாணவர்கள் கலந்துகொண்டால், „சங்கீதம்“ மற்றும் „விளையாட்டும் உடலசைவும்“ இந்த இரண்டு பாடங்களின் புள்ளிகளின் சராசரி கணக்கெடுக்கப்பட்டு ஒரு தசம இடத்தற்கு முழுமைப்படுத்தப்படும். இந்தப்பள்ளியே மாற்றம் தொடர்புடைய சராசரிபுள்ளிகள் மதிப்பீட்டிற்கு சாதாரணமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். |

**6. புகார் பாதை**

மாற்றம் தொடர்புடைய சராசரிபுள்ளிகள் என்பது பெசீர்க் (Bezirks-) - செக்குன்டார் பாடசாலையால் (Sekundar-schule) எடுக்கப்பட்ட ஒரு தொழில் முடிவு. எனவே புகார் பாதை தொடக்கப்பள்ளிக்குள் எடுக்கப்படும் மற்ற தொழில் முடிவுகளைப் போன்றதே: பெற்றோருக்ககும், மாணவர்கள் / மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியருக்கும் இடையில் எந்த ஒரு உடன்பாடும் எட்டப்படாவிட்டால், இந்த முடிவுக்குப் பொறுப்பான நகராட்சி அதிகாரம்[1], கோரும் உரிமையை வழங்கிய பின்னர் முறையான, திரும்ப முறையீடு செய்யக்கூடிய தொழில் முடிவு எடுக்க வேண்டும்.

**7. அனுமதிப் பரீட்சை முலம் சேர்க்கை**

தேர்வு இல்லா நடைமுறை மூலம் தகுதி பெற முடியாத மாணவர்களுக்கு அனுமதிப் பரீட்சை திறக்கப்படும். பெசீர்க் (Bezirks-) - செக்குன்டார் பாடசாலையில் (Sekundarschule) பட்டதாரிகள் WMS, IMS, FMS

[1] பாடசாலைக்கான ஒட்டுமொத்த பொறுப்பும் நகராட்சி மன்றத்திற்கு உள்ளது. நகராட்சி மன்றம், திரும்ப முறையீடு செய்யக்கூடிய பாடசாலை முடிவுகளை, எடுத்துக்காட்டாக தொழில் முடிவை, மன்ற உறுப்பினரிடம் அல்லது பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைக்கலாம். திரும்ப முறையீடு செய்யக்கூடிய தொழில் முடிவுகளை எடுப்பதற்கு எந்த அமைப்பு பொறுப்பு என்பதை ஒவ்வொரு நகராட்சியும் விதிமுறைகளின் தொகுப்பில் வரையறுக்கிறது.

மற்றும் BMS-க்கான அனுமதிப் பரீட்சைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள் யிம்நாசியம் பாடசாலைக்கான அனுமதிப் பரீட்சை பெசீர்க் பாடசாலை பட்டதாரிகளை இலக்காகக் கொண்டது. இந்த அனுமதிப் பரீட்சையில் தனியார் பள்ளியிலிருந்து வரும் மாணவர்களும்அல்லது தனியார் பயிற்சி திட்டத்தைச் சேர்ந்த மாணவர்களும் கூட அனுமதிக்கப்படுவார்கள்.

யிம்நாசியம், பொருளாதாரத் துறைசார் பாடசாலை, கணினித்துறைசார்பாடசாலை மற்றும் துறைசார் பாட-சாலைக்குப் போவதற்கான அனுமதிப் பரீட்சையை பெசீர்க் - செக்குன்டார் பாடசாலையின் கடைசி வருடம் முடிந்த பின்பு அடுத்த வருடம் எழுதலாம். ஆனால் தொழில் துறைசார் பாடசாலையுடன் கூடிய தொழில் புலமைக்கு எழுதும் அனுமதிப் பரீட்சையை கடைசி வருடத்திலேயே எழுதலாம். தனியார் பள்ளி அல்லது தனியார் பயிற்சித் திட்டத்தைச் சேர்ந்த மாணவர்களும் தங்கள் இறுதி ஆண்டில் அனுமதி பரீட்சையை எழுதலாம்.

BMS - அனுமதி பரீட்சையில், எழுத்துத்துத் தேர்வுகள் ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் நடத்தப்படுகின்றன.

யிம்னாசியம் , WMS, IMS மற்றும் FMS அனுமதி பரீட்சையில், எழுத்துத்துத் தேர்வுகள் ஜெர்மன் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் நடத்தப்படுகின்றன.

### 8. பதிவுசெய்தல்

பெசீர்க் - செக்குன்டார் பாடசாலைப் பிள்ளைகள் கடைசி வருடத்தின் போது பெற்றோரின் சம்மதத்துடன் ஜனவரி இடையிலிருந்து 28. பெப்ரவரி வரை கீழுள்ள பதிவு தளத்தூடாக Departements Bildung, Kultur und Sport (www.ag.ch/mittelschulen > Schultyp > Anmeldung) விரும்பிய துறைசார்கல்விக்குப் பதிவு செய்யலாம்.

### 9. மேலதிக தகவல்கள்

மேலதிக தகவல்களை இணையத்தளம் www.ag.ch/leistungsbeurteilung-volksschule > Übertrittsverfah-ren இலும் காணலாம்.